# இணையத் தமிழ் வலைத்தளங்களும், அவற்றின் எதிர்காலமும்.

ம.வெ.இராமச்சந்திரா
(mvrchandra@hotmail.com)

---

கட்டுரைச் சுருக்கம்.

தமிழ் மொழியானது ஓலைச் சுவடிகள் காலம், அச்சுக்கலைக் காலம் என்பதிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கணினி காலத்திற்கு மாறிவிட்டது. உலகை உள்ளங்கையில் வைக்கும் ஆற்றல்படைத்த இணையத்தில் பல்வேறு ஊடகங்களில் உள்ள தடவுகளை (Data) நொடிக்கும் நேரத்தில் பறிமாறிக் கொள்ள இயலும். இவ்வாறு பல்வேறுத் தடவுகளைத் தடையின்றித் தர இணைய வலைத்தளங்கள் பேருதவி புரிகின்றன.

இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் உரைநடைக்கும், அச்சுக் கலைக்கும் அடியெடுத்து வைத்து புகழ் பெற்ற தமிழ் மொழியானது இன்றையக் கணினிப் புரட்சியின் போதும் முன்னோடியாகத் திகழ்கின்றது. இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழிக்குத் தான் அதிக வலைப் பக்கங்கள் உள்ளன. இலட்சக்கணக்கானோர் தினமும் தமிழ் மொழியை இணையத்தின் வழி பயன்படுத்தி வருகின்றனர். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற இணையத் தமிழ் வலைத்தளங்களின் எதிர்காலம் குறித்து ஆராயுங்கால் பல உண்மைகள் நமக்குத் தெளிவாகின்றன.

இணையத் தமிழ் வலைத் தளங்களின் வரலாற்றை நோக்குங்கால் பெரும்பாலான வலைத்தளங்கள் ஏறத்தாழ செய்திப் பத்திரிக்கைகள், வாரப் பத்திரிக்கைகளின் மாதிரி வடிவங்களாகவே அமைக்கப்பட்டன. பத்திரிக்கைகள் ஆரம்பித்து நடத்த இயலாதோர், எற்கனவே பத்திரிக்கை நடத்தி வருவோர் என பலரும் மசாலாப் பத்திரிக்கையை இணையத்தின் வழி நடத்த திட்டமிட்டு இணையத் தமிழ் வலைத்தளங்களை ஆரம்பித்தனர். அரசியல், சினிமா, ஊர்வம்பு என மசாலா நெடி சற்றுத் தூக்கலாகவே தங்களது இணையத் தளங்களைத் துவக்கினர். வெகுசில வலைத் தளங்களே இவற்றிலிருந்து வேறுபட்டன. ஆர்ப்பாட்டமான விளம்பரங்கள், அசத்தலான சம்பளம், ஆடம்பரமான அலுவலகங்கள் என துவங்கப்பட்ட பல வலைத் தளங்கள் இன்று மூடு விழா கண்டு விட்டன. இன்றைய நாளில் பல வலைத்தளங்கள் தோல்வி காணுவதின் காரணத்தைப் பற்றி ஆராயும் போது பல சிக்கல்களை இணையத் தமிழ் வலைத்தளங்கள் எதிர்கொள்ளுகின்றன என்ற உண்மை நன்கு புலனாகிறது.

இணையத் தமிழ் வலைத் தளங்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில் முதன்மையான சிக்கல் வருவாய்க்கான வழிதெரியாமல் தவித்தலாகும். எங்கிருந்து வருமானம் வரும் , யார் தங்களுடைய வலைத்தளங்களின் வாசகர்கள் என்றெல்லாம் தெரியாது அகலக் கால் வைத்த பலவலைத் தளங்கள் இன்று செயலிழந்து விட்டன. மேலும் பல இன்றோ, நாளையோ என ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. மிக அதிகமான இலாபத்தை வலைத் தளங்கள் கொட்டிக் குவிக்கப் போகின்றன என்ற போலியான எதிர்பார்ப்பும், நம்பிக்கையுமே இத்தகைய தோல்விக்கான முக்கிய காரணியாகும்.

போதுமான கணினி பரவல் இல்லாததும், போதுமான மின் வணிகப் புழக்கம் இல்லாததும் தமிழ் வலைத் தளங்கள் தள்ளாடுவதற்கான பிற சிக்கல்களாகக் கருதப்படுகின்றன. வலைத் தளங்களின் வெற்றிக்கு மிக அத்தியாவசியமான இந்த அடிப்படை வசதிகள் மேம்பாடு

அடையும் வரை வலைத் தளங்கள் நீடித்து நிற்பது மிகவும் கடினமாகவே கருதப்படுகிறது.

உலகின் புதிய ஊடகமான இணையம் விடுத்த சவாலை தமிழ் வலைத் தளங்கள் புரிந்து கொண்டு எதிர்நோக்கவில்லை. அச்சில் வரும் இதழ்களின் இணையப் பதிப்பாகவே தமிழ் வலைத் தளங்கள் விளங்குகின்றன. அவை தங்களுக்கென தனி வடிவத்தையோ, குணத்தையோ, இடத்தையோ உருவாக்கத் தவறிவிட்டது மற்றுமொரு சிக்கலாகவே விளங்குகிறது.

அதிக வலைப் பக்கங்கள் கொண்ட மொழி என சிறப்புப் பெற்றதாயினும் தமிழ் மொழியின் எழுத்துச் சிக்கலும், குறியீட்டுச் சிக்கலும் இன்றையவரை தமிழ் மொழிக்கே உள்ள பெரியதொரு சிக்கலாகக் கருதப்படுகிறது. ஏறத்தாழ அனைத்து தமிழ் வலைத் தளங்களும் சொந்தமாக வடிவமைக்கப்பட்ட அச்சுக்களைப் பயன்படுத்தி வருகின்றன. ஒன்றுக்கொன்று உடன்படாமல் தனித்த குணங்களோடு விளங்கும் இத்தகைய அச்சுக்கள் கொண்ட வலைத்தளங்களைப் படிக்க, அவ்வலைப் பக்கத்திற்கான அச்சை இறக்குமதி செய்து கணினியில் நிறுவ வேண்டியது அவசியமாகும். அத்துடன் வலைத் தளங்களுடன் தமிழ் மொழியின் மூலம் தொடர்பு கொள்வதென்பது குதிரைக் கொம்பாகவே விளங்குகிறது. மேலும் குறியீட்டுச் சிக்கலானது இன்றுவரை தீர்க்கப்படாமலேயேயுள்ளது. உலகெங்கும் பலரால் பரவலாக தமிழர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அஞ்சல் முறையினை விடுத்து தமிழக அரசு பரிந்துரைத்த டாம் (TAM), டாப் (TAB) குறியீட்டு முறைகள் இன்றுவரை நடைமுறைப் படுத்தப் படவில்லை. மேலும் யுனிகோட் முறையில் உள்ளீடு செய்யப்பட்டுள்ள தமிழானது தவறான முறை என வல்லுநர்கள் பலரும் கூறியபோதும் இம்முறை திருத்தப்பட இதுகாறும் நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

வருமானம் என்பது கனவாகவே ஆகிவிட்ட நிலையில் இணைத்தில் நிலைத்து நீடிக்க வேண்டும் என்பது மிகவும் கடினமான ஒன்றாகும். இலாபம் அல்லாத வேறு காரணத்திற்காக நடத்தப்படும் வலைத் தளங்கள், சேவைகள் தரும் வலைத் தளங்கள், எதிர்காலத்தை மனதில் கொண்டு வலைத்தளங்கள் துவங்கியுள்ள அச்சில் வரும் பத்திரிக்கைகளின் இணையப் பதிப்பு வலைத்தளங்கள் ஆகியவை தவிர மற்ற இணையத்தமிழ் வலைத்தளங்களின் எதிர்காலம் என்பது மிகப் பெரிய கேள்விக் குறியாகவேயுள்ளது.

சந்தா முறையில் வசூல் செய்து இணையத் தமிழ் வலைத் தளங்கள் நடத்தும் முயற்சி வெளிநாட்டிலுள்ள தமிழர்களைக் குறிவைத்து திட்டமிடப்பட்ட ஒன்றாகும். ஆயினும் எத்தகைய வலைத் தளங்களை அவர்கள் எதிர்நோக்குகிறார்கள், சந்தா கட்டி இவ்வலைத் தளங்களைப் பார்க்க வேண்டிய அவசியம் போன்ற அத்தியாவசியமான கேள்விகளுக்கான விடைகள் குறித்து இது வரை விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவில்லை. எனவே இம்முறையில் இணையவலைத் தளங்கள் நடத்தும் முயற்சியை வீழ்ச்சிக்கான முதலீடாகவே முதலீட்டாளர்கள் கருதுகின்றனர்.

வலுவான அச்சு ஊடகங்களைக் கொண்ட பத்திரிக்கைகள் நடத்தும் இணையத் தமிழ் வலைத்தளங்கள் இன்னும் பல காலத்திற்குத் தாக்குப் பிடித்து எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் என்று வல்லுனர்களால் கணிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி தமிழ் எழுத்தாளர்களுக்கும், வாசகர்களுக்கும் பாலமாக விளங்குவதில் இத் தமிழ் இணைய வலைத் தளங்கள் முக்கிய பங்காற்றுகின்றன.

எவ்வாறாயினும் இணையத் தமிழ் வலைத்தளங்களானது எதிர்கால தமிழ் சந்ததியினருக்கு தமிழை வாரி வழங்கும் ஊற்றாக இருப்பது உறுதியானது. இது எதிர்காலத்தின் மிக முக்கிய ஊடகம். எனவே இவ்வகையான ஊடகத்தில் தமிழ் மொழியின்

வலைத் தளங்கள் வளர்ச்சியுற விரிவான ஆய்வு மேற்கொள்ளுதல் மிகமிக அவசியமானது மட்டுமல்ல, உடனடித் தேவையுமாகும்.